மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் புதன்கிழமை.

<u>இடைநிலை மனு எண்.2/2023</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.514/2019</u>

தமீஜீனிஷா .... மனுதாரர்/வாதி

1. ஷபியுல்லாகான்
2. மகபூப்கான்
3. அமருன்னிஷா
4. ஆசியா
5. ஜெகருன்னிஷா ... வாதிகளாக சேர்க்கப்படவேண்டியவர்கள்

/ எதிர் /

1. இமாம்
2. கௌஸ்பீ
3. சேகர்
4. குலாம்
5. கிராம நிர்வாக அலுவலர், வாலிகண்டபுரம்.
6. வட்டாட்சியர், வேப்பந்தட்டை
4. மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 23.02.2024–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. ராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது மனுதாரர்/வாதி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன் படி புரபோஸ்டு பார்ட்டியை அசல் வழக்கில் வாதிகளாக சேர்க்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் அதன்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.13 18:06:51 +0530

தொடர்ச்சியாக நிரந்தர தடையுறுத்து கட்டளைக்காகவும், மற்றும் செயலுறுத்து கட்டளைக்காகவும் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரரின் கணவர் ஷபியுல்லாகான் என்பவர் இராணுவத்தில் பணி செய்து வந்தார் என்றும் அதனால் மேற்படி வழக்கை அவரால் முன்னின்று நடத்த முடியவில்லை என்பதால் குடும்ப மேனேஜர் என்ற முறையில் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்த நடத்தி வந்ததாகவும், மேற்படி சூழ்நிலையில் மனுதாரரின் கணவர் இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்று தன்னுடம் வாழ்ந்து வருகிறார் என்றும், தற்போது மனுதாரருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு வீட்டில் இருந்து வருகிறேன் என்றும், தன் கணவரும் தன் பிள்ளைகளும் இந்த வழக்கை அவர்களே முன்னின்று நடத்த தயாராகயுள்ளார்கள் என்றும், 1வது புரோப்போஸ்டு வாதி தன் கணவர் என்றும், தன் பிள்ளைகள் 2 முதல் 5 புரோப்போஸ்டு வாதிகள் என்றும், மேற்படி இம்மனுவில் புரேபோஸ்டு பார்ட்டியாக காட்டப்பட்டுள்ளார் என்றும் அவரை இவ்அசல் வழக்கில் வாதிகளாக சேர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும், எனவே மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1, 2, 4ம் எதிர்மனுதாரர்கள்/1, 2, 4ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>

3)மனுதாரர்கள் கூறிய சங்கதிகளை மறுத்தும், மனுவில் கூறிய செய்திகளின் நம்பகத் தன்மையை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர் என்றும், மனுதாரர்/வாதி 2015ம் ஆண்டில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையை சரியான நேரத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும் அ இம்மனுவை தாக்கல் செய்து எதிர்மனுதார்களை துன்புறுத்தவேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்/வாதியின் மனு எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

"மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.13 18:07:11 +0530

6. தீர்வு

இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் அதன் தொடர்ச்சியாக நிரந்தர தடையுறுத்து கட்டளைக்காகவும், மற்றும் செயலுறுத்து கட்டளைக்காகவும் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் மனுவில் புரபோஸ்டு பார்ட்டியை தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என்றும் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இந்நிலையில் மனுதாரரின் கணவர் இந்திய இராணுவத்தில் இருந்து பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று தன்னுடம் வாழ்ந்து வருவதாகவும், தற்போது மனுதாரருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு வீட்டில் இருந்து வருகிறார் என்றும், எனவே தன் கணவரும் தன் பிள்ளைகளும் இந்த வழக்கை அவர்களே முன்னின்று நடத்த தயாராகயுள்ளார்கள் என்றும், எனவே அவர்களை இவ்அசல் வழக்கில் வாதிகளாக சேர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும், கோரியுள்ளதை ஆராய்கையில், மேற்படி அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை குறித்து 16.03.2015 ம் தேதி 1ம் பிரதிவாதியால் ஏற்படுத்திக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவும் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்யவும் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும் குடும்ப மேனேஜர் என்ற முறையில் மனுதாரர்/ வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதும் தெரியவருகிற நிலையில் விளம்புகை பரிகாரம் மனுதாரர்/வாதியை தொடர்ந்து அவரது வாரிசுகளுக்கும் உரிமையை மேலும் எழும் வாய்ப்பு உள்ள நிலையில் மனுதாரர்/வாதிகளின் வாரிசுகளை இவ்வசல் வழக்கில் வாதிகளாக சேர்ப்பது அவசியம் என்றும், அந்தவகையில் மனுவில் கண்டுள்ள புரோபோஸ்டு பார்டிகளை வாதிகளாக சேர்ப்பது அசல் வழக்கை முழுவதுமாக தீர்மானிக்க உதவும் என்ற வகையில் அவர்கள் அவசிய தரப்பினர்கள் ஆவார்கள் என்றும், எனவே இந்த வழக்கின் எதிர்காலச் சிக்கலைத் தவிர்க்க இவ்வழக்கில் புரபோஸ்டு வாதியானவர்கள் வழக்கை தீர்மானிப்பதற்கு அவர் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்பதாகவே இந்நீதிமன்றம் கருதியும், இம்மனுவை தள்ளுபடி செய்ய எதிருரையில் தகுந்த காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று கருதியும்,

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.13 18:07:23 +0530

மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதியும், செலவுத்தொகையின்றி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.13 18:07:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>
இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.03.13 18:07:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.